உ
சிவமயம்



யாழ்ப்பாணம் மளுவராயர் வல்லியார்குறிச்சி
வண்ணார்பண்ணை மாவிட்டபுரம்
வெண்துன்னாலை குடியமர்ந்த
வேலர் சங்கரர் வழித் தோன்றலுமான

பபூன் **M. A.**

# சிதம்பரப்பிள்ளை

அவர்கள்

சிவபதமெய்திய

# 31-ம்நாள் நினைவுமலர்

ஆக்கம்: அ. பௌநந்தி

16—01—1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அமரர் சிதம்பரப்பிள்ளை அவர்கள்

பூமி தன்னில்:- 16—07—1908

இறைவன் பாதத்தில்! 28—11—1996

### இறந்த திதி

ஊரோங்கு தாதுவருடம் ஆயிரத்துதொள்ளாயிரத்து
தொண்ணூற்றாறு
சீரோங்கு கார்த்திகைத் திங்கள்
பதினோராம் நாள் பேரோங்கு
நல்ல சதுர்த்தித்திதி தன்னில்
திருவாதிரையன்று
வல்ல பாரோங்கு M. A. சிதம்பரப்பிள்ளை
சிவபத மடைந்த நாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளமுடன் வாழ்ந்த வரலாறு அகவல்

வண்டிராகம் பயிலும்மருமலர்ப்பூம்வானகயந்தார் மதியரண்ணார்
இரண்டு ராசியிறஞ்சும் ஏகை சிவசிதம்பரப்பிள்ளை பவுன்காதை [தன்னை
பண்டிராமாயணன் நாடகமும் பாவலர்க்கு கண்களென்றுஇன்று
அன்னாரின் சரிதைகளும் உலகோர்க்கு கண்கள் தாமே.

### வரலாறு

இலங்கையின் சிகரமாய் இலங்கும் யாழ்ப்பாணம் நலம் பெறு நாட்டில் நவிலும் துன்னையூரில் விளங்கும் கோவிந்தகடவை இனிய நல்லூரில் ஆறுமுகம் வள்ளிப் பிள்ளை அம்மையும் அமர்ந்திட்ட பதியில் இல்லற வாழ்நாளில் பல்பெறு பதினொரு பிள்ளைகள் பெற்றனர்

அவர்களில் ஆறாம் மகனாய் சிறப்புடன் அவனி தன்னில் அவதரித்திட்டார் சிதம்பரப்பிள்ளையுமே சிறுவயது தன்னில் கல்வியில்சிறந்து கலைபல கற்று மலைபோல் விளங்கி மண்ணில் சிகரமாய் வளர்ந்து செல்லாச்சிப்பிள்ளையை சிறப்புடன் கைப்பிடித்து திருமணம் செய்து இல்லறம்நடத்திய காலைமாண்புடன் வாழ்ந்து சிவனை நினைத்து தேவலிங்கமொடு புண்ணிய மூர்த்தியும் தரணியை நீங்கியே ருத்திராபதி மூன்று குமாரும் கனகரத்தினக் கனிமுணமுடை அன்னபூர ணம்அவனியோர் போற்றும் சிவகெங்காவும் பாருலகோர் புகழ் பகவதியம்மாவும் இன்னிலம் போற்றும்ஏழ்வரைப் பெற்று மண்ணுலகு போற்ற மதிப்பாய் வளர்த்து புத்தியானது புகழ் பெறு கல்வியில் பொறுமைக்கோ நிகர் பூமியிலாருளர் புத்தியானது தன் பதிமேல் சுத்தமாய் பரவுந் தாழ்மையை தனக்குவமானமாய் எழுந்தறிந்து கலைபயின்று நற்றமிழினிய நூல்எத்தனை யும் அத்தனையும் ஆழமாய்கற்றுணர்ந்து படித்தபலருள் ளும் அடுத்தவன் அடக்கிடாது அறிவினால் அறிஞர் அவை தன்னில் முந்தும் பவுன் எனப்புகழ் பெற்ற நற்பாவலன் இயற்றமிசைத் தமிழ் இறுதியாக நாடகம் பலவும் இயற்றியே நெறிசெய்து களம்பல கண்டு கலைஞர் பலரை யுலகில் தோற்றியோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்சுவையும் சொல்வகையும் சொல்நடையும் உணர்ந்தோன் செப்புதற்கரிய சொற்சோராப் பெருமறிஞன் பல்வகை நூல்களையும் படித்து பல மணிகள் எல்லாமே சேர்த்து வைத்த இனிய புலவன் பூமிதனில் புகழ் பல பெற்றான் அவனிதனில் பாருலகோர் புகழ வாழ்ந்தான் ஆற்றல் பல நிறைந்தான் இனிய நன்நாளில் சிதம்பரப்பிள்ளையும் சிவபதமடைந்தாரே.

## விநாயகர் துதி

திங்கள் மும்மாரி பெய்க செகமெலாம் தழைக்கச் சென்தனல்
பொங்கியே வரம்புசாரும் புகழ் துன்னாலை தன்னில் அம்பிகை
ஈன்றெடுத்த ஆனைமா முகவன் தானும்
தங்கிடும் கோவிற்கடவை தலந்தனை போற்றி செய்வோம்.

## முருகன் துதி

நானென் செய்யும் வினை தானென் செய்யும்
எனை நாடிவந்த கோளென்செய்யும் கொங்சடற்றென் செய்யும்
குமரேசன் இருந்தாலும் சதங்கையும் வேலும் முத்தோடும்
கடம்பா எம்முன்னே வந்து தோறுடனே.

## மாயவன் துதி

கடல்கொண்டு திரைமோத கரைநண்டு குரைகிற
படைநண்டு விளையாடுமே — கண்ணன்
நடைகண்டு கயல்பாய செந்நெல் விளைகண்டு நந்தூர
ஆலினிலை கண்டு துயில் மாயனே.

## அம்பாள் துதி

### பல்லவி

அம்பனியிரங்கா தெனில் புகழேது
அம்பனிகிலே செகநாதன் வாழ் மார்பில்
அமர்ந்திடு நவமணியே.

### அனுபல்லவி

தாயிரங்காவிடில் சேயுயிர் வாழுமோ
சகலவுயிர்கட்கும் நீ தாயல்லவோ (அம்பனியிர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணம்

பாற்கடலில் உதித்த நவமணியே
சௌ பாக்கிய லட்சுமியென்னை கடைக்கண நீயே
நாற்கவியும் போதியும் புலவோர்க்கும்
மெஞ்ஞானி யர்க்கும் உயர்வானவர்க்கும்
(அம்பனியிரங்கா......)

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

அப்பன் நீயம்மை நீ யையனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதருமொன் பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமுமோ ரூரும் நீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய் நீ
துணையா யென் னெஞ்சந் துறப்பிப்பாய் நீ
இப்பனநீ யிம்மணிநீ யிம்முத்து நீ
இறைவா நீயே றூர்ந்த செல்வ நீயே.

திருச்சிற்றம்பலம்

## திருவாசகம்

பால் நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா வானந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

சுருதி வானவராந் திருநெடுமாலாஞ்
சுந்தர விசும்பி னிந்திரனாம்
பருதிவானவனாம் படர்சடர் முக்கட்
பகவான மகவுயிக் கமுதாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எருது வாகனனாம் எயில் கண் மூன்றெரித்த
ஏறு சேவகனுமாம் பின்னும்
கருதுவார் கருதுமுருவமளங் கங்கை
கொண்ட சோளேச்சரத்தானே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொழியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் முலகுங் கழற வுழறி
யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருத்தொண்டர் புராணம்

இறவாதவின்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமைவேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உனைஎன்றும்
மறவாமை வேண்டுமின்னும் வேண்டும் மகிழ்ந்து பாடி
அருவாநீயாடும் போதுன்ன டியின் கீழிருக்க வென்றார்.

## திருப்புகழ்

உனைத் தொழுதிலன் உனதியல் பிணையுரைத்திலன்
பலமலர் கொடுனடியினை யுறப் பணிந்திலன்
ஒரு தவமில னுனதருள் மாறாய்.

உளத்துளன் பினகுறை விடமறிகிலன்
விருப்பொடுன் சிகரமும் வலம் வருகிலன்
உவப்பொடுன் புகழ்துதி செயவிணைகிலன் மலை போலே

கனைந்தெழும் கபட துடிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலி தனுழையினர்
கதித்தடந்தெறி கயிறெடு கதைகொடு கொடுபோதே

கலக்குறுஞ் செயல் ஒளிபெற அழிவுற
கருத்துறைந்தல முறுபொழுதளவை கொள்
கணத்திலென் பயமற மயில் முதுகினில் வருவாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினந்தினந் சதுர்மறை முனிமுறை கொடு
புனற் சொரிந்தலை பொதிய விண்ணவரொடு
சினைந்த நிந்தனை செய்து முனவரச் தொழ மகிழ்வேலா
தெனத் தெனந்தெனை எனவரு அழிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழிதிகழ்
திருப்பரங்கிரி தனிலுறை சரவணப் பெருமாளே.

## திருக்குறள்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

## மூத்தமகன் தேவலிங்கம் புலம்பல்

என்னோடு உடன்பிறந்தார் எல்லோரும் ஏங்கிஅழ
என்னவென்று நான் எண்ணியே ஓடிவர
மண்ணையே விட்டுநீ மறைந்துதான் போனாயோ விதியோ
விண்ணையே சேர்ந்தாயோ விட்டுநீ போனாயோ

எண்ணியே நானும் நைந்துருகியே
உந்தன் தலைதனனில் கொள்ளி வைத்தேன்
வெந்தன் நெஞ்சதிர பொன்னோடு கொண்டு பிச்சையேந்தும்
பொன்னாடு சேர்ந்தனையோ புலம்புகிறேன் ஐயோ ஐயோ.

## இளையமகன் புண்ணியமூர்த்தி புலம்பல்

மாதாவை இழந்ததுன்பம் சீராக மாறவில்லை
ஏனோ நீயும் எமைவிட்டுச் சென்றாயையா
சீதாவும் நானும்கூட கதறியே ஓடிவந்தோம்
ஏதொன்றும் சொல்லாமல் எமைவிட்டுச் சென்றாயையோ.

கடைசி மகனென்று கனிவாக எனை வளர்த்தாய்
இளைய மகனென்று இன்பமாய் வாழவைத்தாய்
புண்ணியமூர்த்தி யென்று புனிதப் பெயரும் வைத்த
புண்ணியனே யுமையெப்பிறப்பில் காண்போமினி

## மூத்தமகன் கனகரத்தினம் புலம்பல்

தந்தையார் நம்மைவிட்டுப் பிரிந்தாரென்று
தந்தியே எமக்கிங்கு வந்ததையோ
தடியெடுத்தறியா எங்கள் தயவுடை ஐயா நீயும்
மடிந்துதான் போயினையோ மறலியுயிர் கவர்ந்தனனோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துமே அழுது தீர்த்தோம்
தனிமரமாய் தவித்து நின்றோம்
எப்போதினிக் காண்போமென்று ஐயோ
ஏங்கியே அழுகின்றோமே ஏங்கியே அழுகின்றோமே

## சிவகெங்கா புலம்பல்

நலமுடன் என்றும் நம்மைக் காத்திட்ட ஐயா
பலமெலாம் இழந்துநாம் நிற்கின்றோமே
உலகினை விட்டுநீயும் உத்தமா ஏனோ சென்றாய்
நாமெல்லாம் என்ன செய்வோம் நைந்துமே வாடுகிறோம்
கதறியே அழுகின்றோமே காதிலே விழவில்லையோ
பதறவே வெம்மை விட்டுபிரிந்து நீ சென்றனையோ
கதறவும் முடியுதில்லை கவலையும் தீருதில்லை
சிகரமே என்ன செய்வோம் தவிர்த்துமே நிற்கிறோமே.

## இளைய மகள் பகவதியம்மா புலம்பல்

பொன்னிலம் போற்றும் பொன்மலர் என்னைப்பெற்று
கண்ணென மதித்து கனிவொடு பெயர் சூட்டி
பாடங்கள் பல சொல்லி பண்புடன் வளர்த்தாயையோ
பண்புடன் பக்குவமாய் எமையெல்லாம் வளர்த்தவரே
அன்புடன் அருகிருந்து ஆண்டாண்டு பணி செய்வேனே
அன்பமேது மில்லாதெமை துணிவுடன் நடந்தினீரே
அன்பினால் துடிக்கவிட்டு ஏங்கியே அழவும்விட்டு
அம்பென ஒரு நொடியில் எம்மைநீ பிரிந்தாளனையோ;

## மருமக்கள் புலம்பல்

எங்கள்மாமா ஏனோ எம்மைமவிட்டுச் சென்றீர்
ஏங்கவைத்து தவிக்க விட்டு எங்கு போனீர்
தங்கிய இவ்வுலக வாழ்வையே வெறுத்தீரோ
பொங்கியே வருமன்பை வெம்மில் பொழிந்துதான் தீர்த்தீரோ
மங்கிடாப்புகழ் பெற்ற மாமா இங்கு
கலங்கவே எம்மைவிட்டு தனியவே சென்றீரையோ
மங்கிடா உள்ளம் ஏங்குதே இனிநாம்
தயங்கிடா யாரையோ மாமா வென்போம்

## இளைய மருமகன் அமிர்தலிங்கம் புலம்பல்

அம்மானென்று அன்புடனே நானழைக்க தம்பி
வாடாவென்று பண்புடனே அருகிருத்தி
போடாவென்று பிறரென்னைப் பேசா வண்ணம்
வாடாதஅன்பினை அவனியில் பொழிந்தீரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடா உங்களை வாவென்றழைக்க
வீடாவிட்டு நீங்கள் விண்ணுலகு சென்றீரோயோ
காடே தவித்து நிற்கிறதே பிரிவாலையோ
என்று நாம்காண்போமென்று ஏங்கியே அழுகின்றோமே;

## கண்டியரசன் M. A. மகாலிங்கம் புலம்பல்

கண்ணை இமைபோல காலமெல்லாம் காத்தவரே
பொன்னோடு புகழ்பலம் பெற்றுமே தந்தவரே
மழுங்கிடா அறிவுதனை அளவறியாதுரைத்தவரே
கலங்கிடா வீரத்தையெமக்கு விதையிலே போட்டவரே
தங்கிடும் புகழையெனக்கு தரணியில் தந்தவரே
துலங்கிடும் துன்னையூரில் விளங்கிடும் விளக்குநீயே
கொம்பிழந்த கொடியதைப்போல் தனித்துமே நிற்கின்றேனே
எழுபிறப்பில் எப்போதினி யானுனைக் காண்பேனையா.

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

அழகான பேரையெமக்கு பிறந்தவுடன் சூட்டிவிட்டு
புகழாகவாழ வென்று புத்திமதிகள் பலவும் சொல்லி
இகழாவண்ணம் இனிய அறிவு பலவூட்டி
மண்ணைவிட்டு மறைந்துதான் போயினையோ
மங்காத புகழை மீதமாய் விட்டுச்சென்றா
தங்கம்போன்ற இனியனே தவிக்கின்றோம்
எம்மையேன் அழவிட்டு சென்றாயையா
நம்மை மறந்து நலிந்து வாடுகின்றோம்.

## பீட்டப் பிள்ளைகள் புலம்பல் (34பேர்)

மங்கிடா புகழ்தன்னை பூமியில் பெற்றவரே
தங்கிடாது நீண்டநாள் இவ்வுலகை நீத்தனையோ
துலங்கிடும் உங்கள் புகழ்கலங்கிடாது காப்போமே
கலங்கிடும் பிஞ்சுகளின் கவலை தீர்க்கவாவேணையோ

## புஸ்பலிங்கம், புவனலிங்கம், புனிதலிங்கம், சந்திரவிம்பம், சந்திரவதனம், சந்திராதேவி, புஸ்பவதி புலம்பல்

அம்மாவை இழந்த முதல் அன்னமே ஊட்டிநின்றீர்
அன்றுமுதல் இறுதிவரை ஆறுதல்பலவும் சொன்னீர்
இன்றுமே தனித்தது போல கதறியே அழுகின்றோமே
கவலையால் துடிக்கவிட்டு பிரிந்து ஏன் சென்றீரையோ;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகேசு, கதிர்காமத்தம்பி, சிவகாமிப்பிள்ளை பார்வதி புலம்பல்

ஞ்சியப்பு என்று கூப்பிடும் குரல்கேட்டதுமை
அம்மாவைப் போலெமை அன்பு அருகிருத்தி
ஆரமுதூட்டி அன்புடனே எமை வளர்த்த
அன்பனே அன்றுநீ எமைவிட்டு எங்கு சென்றாய்

## மைத்துனன் ஏரம்பு புலம்பல்

ஏரம்பு என்றென்னை அன்புடன் அழைப்பாயையோ
கூரம்வந்தென் மார்பிலே பாய்ந்ததையோ
யாரைவிட்டு பிரிந்துமே சென்றனையோ
எனை பரிதவிக்க விட்டு பறந்துதான் போனனையோ.

## ஊரார் புலம்பல்

ஊரின் ஒளிவிளக்கே உத்தமா எங்கு சென்றாய்
பேராக வாழ்ந்தேனே பிரிந்துதான் எங்கு சென்றாய்
தரணியில் தவிக்க விட்டு தனித்துமே சென்றாயையோ
பரணியை நீங்கிநீயும் பிரிந்துமேன் சென்றாயையோ
ஊரெல்லாம் அழுகிறதையா உந்தன் ஒளி பரவுதையா
பாரெல்லாம் புகழ் பெற்றபண்பனே அழுகின்றோமே
சீரெலாம் இழந்துநாம் கதறியே நிற்கின்றோமே
எமையெல்லாம் தவிக்கவிட்டு ஏனோநீ சென்றாயையோ.

## தேற்றம்

முந்தேறு கிரிநயுக மாந்தாதாவு மிறந்துபோனார்
நந்தேறு கடலடைந்த ஸ்ரீராமச்சந்திரனோடு பலமகிபர்
இறந்துவிட்டார் வந்தேறு குருகுலத்து தருமருடன்
துரியோதனனும் மாண்டுபோனான் அங்கவரோடு
M. A. பயூன் சிதம்பரப்பிள்ளையை அடக்கலாமோ.

ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ இம்மாநிலத்தில்
நமக்குமது வழியே நாம் போமளவும்
எமக் கென்னென்றிட்டிரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

ஐயோ என்று அலறி உடனே ஓடிவந்தோர் உடனிருந்து அழுதோர் இரவிருந்தோர் பாடல்கள் பாடியோர் பந்தல்கள் போட்டோர் ஊரெல்லாம் இளவு சொன்னோர் இறுதிக் கிரியை வந்துமே கலந்து கொண்டு ஆறுதல்பல வந்து சொன்னோர் அனுதாபம் தெரிவித்தோர் எட்டுவரை வந்து போனோர் அந்தியேட்டிக்கிரியையில் கலந்து கொண்டோர் அனைவருக்கும் எங்கள் நன்றிகள்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இன்றைய மதிய போசனத்தில் கலந்து செல்லுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

*சாந்தி!* *சாந்தி!!* *சாந்தி!!!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org